# பொதுக்காலம் 5ஆம் ஞாயிறு - முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில் இயேசு நம்மை, "உப்பைப் போல, ஒளியைப் போல வாழச் சொல்லவில்லை. மாறாக, "உப்பாக இருக்கிறீர்கள், ஒளியாக இருக்கிறீர்கள்" எனத் தெளிவாக நாம் நடைமுறையில் அவ்வாறு இருப்பதாக, வாழ்வதாகக் கூறுகின்றார். நாம் அப்படி இருக்கின்றோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் இயேசு கூறினாரோ என்னவோ. எதை மனதில் வைத்து இறைமகன் இவ்வாறு கூறினார் என ஆராய்வதை விட நம் வாழ்வு அவ்வாறாகவே போய்க் கொண்டிருக்க வேண்டுமென்பதே அவர் மனதில் உள்ளார்ந்த வெளிப்பாடாக, மையக் கருத்தாக இருக்கின்றது. நாம் அப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா என்பது ஒரு கேள்விக்குறிதான் என்றாலும், இன்னும் அப்படியே ஏனோதானோ என்ற கிறிஸ்தவர்களாக வாழாமல் அவர் நம்மைக் குறித்துக் கூறியதை உண்மையாக்கி வாழ்வதுவே நம் ஒவ்வொருவரின் மனசாட்சிக்கு சிறந்த பதிலாகும்.

உப்பிற்கு உவர்ப்புத் தன்மை அவசியம். அது இல்லையென்றால் அது பயனற்றுப் போய்விடுகின்றது. உப்பின் இயல்பு தனக்காக அல்ல, மற்ற பொருட்களோடு இணைந்து தாக்கத்தை ஏற்படுத்துவதே. அதுபோல கிறிஸ்தவர்கள் எனக் கூறுகின்ற நாமும், நமக்காக வாழாது, மற்றவர்களுக்காகவும், மற்றவர்களோடும் கலந்து மற்றவர்களின் மேல் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கே. உப்பு அது சேர்கின்ற உணவோடு கரைந்து விடுகின்றது. சுவையும் கொடுக்கின்றது. மற்ற பொருளோடு இணையும்போதுதான் அர்த்தம் பெறுகிறது. அதுபோலவே நாமும் இந்த உலகத்தோடு கரைந்து, பிறருக்கு பயனுள்ள வாழ்வு வாழ வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களுக்கு, வறியவர்களுக்கு தானாக முன்சென்று உதவும்போது கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாக ஒளியாக ஒளிர்வோம். சிற்றின்பம், நுகர்வு கலாச்சாரம், கடவுள் நம்பிக்கையின்மை நிறைந்துள்ள இந்த உலகத்தில் நமது வாழ்வால் உப்பாக, ஒளியாக இருந்து பிறருக்கு ஒளி கொடுப்போம். இத்திருப்பலியில் தன்னையே உப்பாய், ஒளியாய் மாற்றிக் கொண்டு, நமக்கு

ஒளி கொடுக்க இறைமகன் அப்ப, இரச வடிவில் தன்னையே தருகின்றார். அவரைப் பெற்றுக் கொண்டு, உப்பாக, ஒளியாக பிறருக்கு வாழ்வு கொடுக்க அருள் வேண்டி இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம். எப்போதும் சாரமுள்ளவர்களாக, சமுதாயத்திற்கு வளம் சேர்ப்பவர்களாக, கிறிஸ்துவைச் சாhந்தவர்களாக, நமது சேவையால் பதில் தந்திட அருள் வேண்டி நம்மையே அர்ப்பணிப்போம் இத்தெய்வீகத் திருப்பலியில்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. தாயும், தந்தையுமான இறைவா,

உம் பணிக்காய் நீர் தேர்ந்தெடுத்து, அர்சித்திட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள். துறவறத்தார் அனைவரும், தங்கள் பணிவாழ்வில் உமதன்பு வாழ்வை, வார்த்தையாக இல்லாமல் வாழ்வாக பிரதிபலித்து, முன்மாதிரியான சாட்சிய வாழ்வு வாழ்ந்து, மக்களை நல்வழியில் வழிநடத்தி, இறையாட்சியை எங்கும் வளரச் செய்திட, தூய ஆவியின் ஆற்றலையும், வல்லமையையும் நிறைவாகப் பொழிந்து, காத்திட வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. உலகின் ஒளியே இறைவா,

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த உலகம் காட்டும் மாயக் கவர்ச்சியான பணம், பதவி, புகழ், மது, மாது என்ற போதையில் தங்கள் வாழ்வை தொலைத்திடாது. தடம் புரண்டிடாது, உண்மை இறைவன் உம்மை விட்டு விலகி, பாவத்திலே வீழ்ந்திடாது, இருளின் ஆட்சிக்குரிய தவறான செயல்களிலிருந்து விடுபட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய செயல்களை உணர்ந்து, அதன் வழியில் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கூடிய தெளிவான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அரணும், கோட்டையுமான இறைவா,

எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், சோதனைகளைக் கண்டு, மனம் சோர்ந்து, தளர்ந்து, வாழ்வை முடித்துக் கொள்ளும்

கோழைத்தனமான, முட்டாள்தனமான முடிவுகளை எங்கள் மனதிலிருந்து அகற்றி, நீர் எங்களோடு என்றும் உடனிருக்கின்றீர், பயணிக்கின்றீர், எங்கள் வாழ்வை வளமாக்குவீர் என்ற ஆழமான விசுவாசத்தை, நம்பிக்கைளை நாங்கள் பெற்று, வாழ்வின் பயணத்தை உம் கரம் பிடித்து, நடந்திடக் கூடிய உறுதியான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. வாழ்வு வழங்கும் வள்ளலே இறைவா,

அன்று வயது முதிர்ந்த சாரா, அன்னா, எலிசபெத் இவர்களின் கண்ணீரின் வேண்டுதல்களை ஏறெடுத்து, அவர்களுக்கு மக்கட்பேற்றினை அளித்தீரே, இன்று திருமணமாகி பல ஆண்டுகள் கடந்து, குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கித் தவிக்கும் தம்பதியரின் வேண்டுதல்களை கண்ணோக்கிப் பாரும். அவர்களின் கண்ணீரை கண்ணுற்று, அவர்களுக்கு நல்ல மக்கட்பேற்றினை அளித்து, அவர்கள் அக்குழந்தையை உமக்கும், இச்சமூகத்திற்கும் உகந்தவர்களாக வளர்த்து ஆளாக்கிடக் கூடிய, பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. இரக்கத்தின் ஊற்றே இறைவா.

வறுமை, ஏழ்மையினால் துயருறும் மக்களுக்கு, அவர்களின் தேவைகளையறிந்து, உதவிடவும், எங்களிடம் இருப்பதை, இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவும், விபத்து, ஆபத்துக்களில் சிக்கித் தவிப்பவர்களை கண்டும் காணாததுபோல், "நமக்கேன் வம்பு" என விலகிச் செல்லாமல், நல்ல சமாரியனைப் போல் உடனிருந்து உதவிடவும், அநீதிகளைக் கண்டு, தட்டிக் கேட்காமல், கோழைத்தனமாக வாழாது, தவற்றினைச் சுட்டிக் காட்டி, நீதியை நிலைநாட்டவும் கூடிய, துணிவு நிறைந்த உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com